சுற்றுச்சூழலை பாதுகாக்க

# தொழில்நுட்பங்களை கண்டுபிடிக்கும் போட்டி

## சென்னை ஐ.ஐ.டி. வளாகத்தில் நடைபெற்றது

சென்னை, பிப்.10–

சுற்றுச்சூழலை பாதுகாப்பதை ஊக்குவிக்கும் விதமாக சென்னை ஐ.ஐ.டி. அமெரிக்க தூதரகம் மற்றும் தொழிற்சாலை கழிவு மேலாண்மை சங்கம் ஆகியவை இணைந்து சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து அதன் உபயோகத்தை வெளிப்படுத்தும் போட்டி சென்னை கிண்டியில் உள்ள ஐ.ஐ.டி. வளாகத்தில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் தமிழக அரசின் எரிசக்தி துறை முதன்மை செயலாளர் விக்ரம் கபூர், சென்னையில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரி ராபர்ட் ஜி பர்கஸ், சென்னை ஐ.ஐ.டி. இயக்குனர் பாஸ்கர் ராமமூர்த்தி உள்பட பலர் பங்கு பெற்றனர். போட்டியில் பங்கு பெறுவதற்காக கல்லூரி மாணவர்கள் சுமார் 500–க்கும் மேற்பட்டோர் பதிவு செய்தனர்.

அதில் 25 பேருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர்கள் சுற்றுச்சூழலை பாதுகாக்கும் விதமாக தொழில்நுட்பத்தை கண்டுபிடித்து அதன் உபயோகத்தை வெளிப்படுத்தி காண்பித்தனர். இதில் சிறப்பான தொழில்நுட்பத்தை கண்டுபிடித்ததாக முதல் 5 பேர் தேர்வு செய்யப்பட்டனர். அதில் முதல் 3 பேருக்கு அவர்களுடைய கண்டுபிடிப்புகளை சந்தையில் பயன்படுத்துவதற்கு ஏதுவான நிதிஉதவி மற்றும் அதற்கான ஆலோசனைகளையும் சென்னை ஐ.ஐ.டி. வழங்க இருக்கிறது.

இத்தகவல் சென்னை ஐ.ஐ.டி. வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.